# உதவி அமர்வு நீதிமன்றம், கோவில்பட்டி.

## SC No : 204/2016

| | |
|---|---|
| பெயர் | .. சண்முகம் (அசா12) |
| த/பெ. க/பெ | .. |
| கிராமம் | .. |
| தாலுகா | .. |
| தொழில் | .. |
| வயது | .. |

1873 ம் வருடத்திய இந்திய சாட்சிய சட்டத்தின் பிரகாரம் 2025 ஆண்டு ஏப்ரல் மாதம் 16 ம் நாள் இந்நீதிமன்ற உதவியாளர் கார்த்திகா அவர்களால் மேற்படியாரிடம் சத்திய பிரமாணம் பெறப்பட்டது.
16.04.2025

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்சமயம் ஈரோடு மாவட்ட மதுவிலக்கு அமலாக்கப் பிரிவில் காவல்துணை கண்காணிப்பாளராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்பு 23.08.2015 தேதி மாசாட்பட்டி காவல்நிலைய ஆய்வாளராக பணியில் இருந்தபோது, சங்கரலிங்கபுரம் காவல் நிலையத்தின் பொறுப்பு ஆய்வாளராக இருந்தபோது சங்கரலிங்கபுரம் காவல் நிலைய குற்ற எண். 84/2015 பிரிவுகள் 448,294(பி),323,307 இதசபடி பதிவு செய்யப்பட்ட வழக்குகோப்பை மேல்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினம் புகைப்பட கலைஞர் உடன் சம்பவஇடத்திற்கு சென்று சாட்சிகள் முத்துராஜேஷ்வரன் மற்றும் முருகன் ஆகியோர் முன்னிலையில் சம்பவஇடங்களையும், அதன் சுற்றுப்புறங்களையும் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அதில் சாட்சிகள் முத்துராஜேஷ்வரன் மற்றும் முருகன் ஆகியோர்களிடம் கையெழுத்து வாங்கினேன். அந்த பார்வை மசஜர் **அசாஆ.7.** மாதிரி வரைபடம் **அசாஆ.8.**அது சமயம் புகைப்பட கலைஞர் சம்பவஇடத்தை காட்டக்கூடிய புகைப்படங்கள் எடுத்தார். சம்பவஇடத்தில் சாட்சிகளான சுப்புலட்சுமி, பாலமுருகன், கனகலட்சுமி ,அசோகன் மற்றும் பார்வை மகஜரில் உள்ள 2 சாட்சிகளையும் தனித்தனியாக விசாரணை

செய்து, தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். அதேபோல் புகைப்படகலைஞர் முருகானந்தம் என்பவரையும் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். கோவில்பட்டி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த இந்தவழக்கில் காயம்பட்ட நபர்களான கிருஷ்ணமூர்த்தி, பஞ்சாமிர்தம் ஆகிய இருவரையும் விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்படி காயம்பட்ட நபர்களுக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் சுகிர்தராஜ் என்பவரையும் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அதன்பிறகு இந்தவழக்கு சம்பந்தபட்ட எதிரியை தேடிவந்தநிலையில் அன்றைய தினம் காலை11.30 மணிக்கு ஜமீன் கோடாங்கிபட்டி பேருந்துநிறுத்தம் அருகில் நின்றுகொண்டிருந்த எதிரி ராஜவேல் என்பவரை சாட்சிகள் அடையாளம் காட்ட போலிஸ் பார்ட்டியுடன் அவரை கைது செய்தபோது எதிரி தனக்கு கைது செய்தஇடத்தில் ஆபத்து இருப்பதாகவும்,அதனால் தன்னை கிராமநிர்வாக அலுவலகத்திற்கு அழைத்துசென்றால் அங்கு வைத்து ஒப்புதல்வாக்குமூலம் கொடுக்க தயாராக இருப்பதாக கூறியதை அடுத்து எதிரியை ஜமீன் கோடாங்கிபட்டி கிராமநிர்வாக அலுவலகத்திற்கு எதிரியை போலிஸ் பார்ட்டிகள் சகிதம் அழைத்துசென்று எதிரியை விசாரிக்கையில் அவர்தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல்வாக்குமூலத்தை கிராமநிர்வாக அலுவலர் ஆறுமுகம், கிராமஉதவியாளர் ரவிக்குமார் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்தேன். அந்த ஒப்புதல்வாக்குமூலத்தில் அவர் தன்னை அவரது வீட்டிற்கு அழைத்துசென்றால் அவர் சம்பவத்திற்கு பயன்படுத்திய அரிவாள் மற்றும் உபயோகப்படுத்தாமல் உள்ள மிளகாய்தூள் பொடியையும் ஆஜர்படுத்துவதாக கூறியதை தொடர்ந்து எதிரிகளையும் சாட்சிகளையும் எதிரியின் வீட்டிற்கு அழைத்துசென்றபோது அவர்தானாக தனது வீட்டில் இருந்த சம்பவத்திற்கு பயன்படுத்திய அரிவாள் மற்றும் பாக்கி உள்ள மிளகாய்தூள் பொடியை எடுத்து ஆஜர்செய்ததை மேற்படி சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சியில் 13.00 முதல் 13.10 மணி வரை கைப்பற்றினேன். மேற்படி அத்தாட்சிகளிடம் கையெழுத்து வாங்கினேன். மேற்படி ஒப்புதல்வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அசாஆ.9.** நான் தயார்செய்த அத்தாட்சி ஆவணம் **அசாஆ.10.** பின்னர் கைதுசெய்யப்பட்ட எதிரி, கைப்பற்றப்பட்டபொருட்கள் உடன் காவல்நிலையம்வந்து எதிரியை வழிக்காவல் மூலம் விளாத்திகுளம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். மேலும்

கைப்பற்றப்பட்ட பொருட்கள் சம்பந்தமாக படிவம் 91 தயார்செய்து சம்பந்தபட்டபொருட்களை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். படிவம் 91 **அசாஆ.11.** மேலும் சம்பவத்தில் ஈடுபட்ட எதிரி தன்னை இந்தவழக்கின் புகார்தாரர் மற்றும் சாட்சிகளாக இருக்கக்கூடிய 5 நபர்களுக்கு எதிராக ஒரு புகார்மனுகொடுத்ததை நிலைய குற்ற எண். 85/2015 பிரிவுகள் 147,148,323,324 இதசபடி வழக்கு பதிவு செய்யப்பட்டது. அந்த குற்றவழக்கு சம்பந்தமாக நான் விசாரணை மேற்கொண்டேன். அந்த விசாரணையில் மேற்படி குற்றவழக்கு சம்பவம் உண்மைக்கு புறம்பானது என தெரியவந்தது. அதன்பின்னர் மேற்படி குற்றவழக்கை பதிவு செய்த சங்கரலிங்கபுரம் காவல்நிலைய உதவி ஆய்வாளர் கிரேஸ் சோபியா பாய் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அதன்பின்னர் சங்கரலிங்கபுரம் காவல்நிலைய ஆய்வாளர் விடுப்பு முடிந்து பணிக்கு சேர்ந்துவிட்டதால் அவரிடம் வழக்குகோப்புகளை ஒப்படைத்துவிட்டேன்.

**குறுக்கு விசாரணை**

முதல்தகவல் அறிக்கை காலம் 3 ல் சம்பவநாள் 23.08.2015 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தகவல் பெறப்பட்ட நேரமாக 23.08.2015 தேதி காலை 9 மணி என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சம்பவஇடத்திற்கும் எங்கள் காவல்நிலையத்திற்கும் இடையில் சுமார் 3 கிமீ தூரம் இருக்கும். எதிரிகொடுத்த புகாரின் அடிப்படையில் 5 நபர்கள் மீது எங்கள் காவல்நிலையத்தில் குற்ற எண். 85/2015 என வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி குற்ற எண்.84/2015 மற்றும் குற்ற எண். 85/2015 ஆகிய இரண்டும் Case in Counter வழக்குகள் என்றால் சரிதான். கோவில்பட்டி அரசுமருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த அசா.1 இடம் நான் விசாரித்தேனா என்றால் விசாரித்தேன். முதல்தகவல் அறிக்கையில் அசா.1 க்கு அதிககடன் சுமை இருந்ததாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அசா.1 ன் மனைவி பெயரில் அவரது மாமனார் உயில்எழுதிவைத்ததாக முதல்தகவல்அறிக்கையில் எந்த விவரமும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சம்பவம் இடம் அருகில் உள்ள வீடுகளில் வசிக்கும் நபர்களிடம் நான் விசாரணை செய்தேனா என்றால் விசாரணை செய்தேன். அவர்களை சாட்சிகளாக இந்தவழக்கில் சேர்க்கவில்லை என்றால்

சாட்சிகள் தங்களை நீதிமன்றத்திற்கு அழைக்கக்கூடாது என கூறியதால் அவர்களை சாட்சிகளாக சேர்க்கவில்லை. சம்பவஇடத்தில் நான் எந்த சாட்சிகளிடமும் விசாரணை செய்யவில்லை என்றாலும் குற்றஎண்.103/2015 பிரிவுகள் 174 குவிமுச விசாரணைக்காகவே நான் கோவில்பட்டி அரசுமருத்துவமனைக்கு சென்றுவிட்டேன் என்றாலும் அதனால் இந்தகுற்றவழக்கு சம்பந்தமாக நான் எந்த விசாரணையும் மேற்கொள்ளவில்லை என்றாலும் சரியல்ல. நான்சொன்னமாதிரி சொன்னநேரத்தில் சொன்னவிதத்தில் சாட்சிகளிடம் விசாரணை செய்யவில்லை என்றாலும் முதல்தகவல்அறிக்கை சொன்னநேரத்தில் பதிவு செய்யப்படவில்லை என்றாலும் , அத்தாட்சி ஆவணம் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல. எதிரி அளித்த ஒப்புதல்வாக்குமூலத்தில் சம்பவஇடத்தில் தனக்கு போதிய பாதுகாப்பு இல்லை என்ற விவரத்தை கூறியுள்ளாரா என்றால் இல்லை. எதிரிக்கு ஏற்பட்ட காயம்சம்பந்தமாக அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டதா என்றால் சிகிச்சை அளிக்கப்பட்டுதான் நீதிமன்றகாவலுக்கு அனுப்பிவைத்தார். நான் உண்மையான குற்றவாளிகளை மறைத்து எதிரிமீது பொய்யாக வழக்குதாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** இல்லை.

(ஒம்) D. மாரிக்காளை, B.Sc.,M.L.,

சார்பு நீதிபதி,
கோவில்பட்டி.